RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22236

OPEN ACCESS

# மு.மேத்தா கவிதைகளில் உழைப்பாளர் சமூகம்

**பொன். கனகா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கீதா ஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குறுக்குச்சாலை,தூத்துக்குடி-628 722 தமிழ்நாடு, இந்தியா

# Labor society in the Poems of M. Metha

**Pon. Kanaga** [a, *]

[a] Department of Tamil, Geetha Jeevan Arts & Science College, Kurukkuchchalai, Thoothukkudi-628722, Tamil Nadu, India

* Corresponding Author: Pon9514425928@gmail.com

Received: 26-09-2022
Revised: 29-10-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature emerges from social life. Literature takes its theme from various values and cultural elements found in the collective life of the people. The author's social vision is the basis for a literature in describing about various aspects of social life. Working people are the basic reason for the development of a country. Working people progress in their life. All races in the world are working. But there is only one worker in the human race and the person who exploits it is another person. Work is the only thing that takes this world to the next stage. On that basis, the purpose of this article is to examine the thoughts expressed by M. Metha in his poems about the working class people and labor society.

**Keywords:** Metha, Worker, Low Class Worker life, Development

## முன்னுரை

இலக்கியம், சமூக வாழ்வியலில் இருந்து தோன்றுகிறது; மக்களின் கூட்டு வாழ்க்கையில் காணப்பெறும் பல்வேறு விழுமியங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் தனக்கான கருப்பொருளாகக் கொள்கிறது. ஒரு இலக்கியம், சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை விவரிப்பதாக அமைவதற்குப் படைப்பாளனின் சமுதாயப் பார்வையே அடிப்படையாகிறது. அந்த அடிப்படையில், உழைக்கும் வர்க்கத்தினர் குறித்து, மு.மேத்தா தனது கவிதைகளில் வெளிப்படுத்தும் சிந்தனைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு குறிப்பிட்ட சமூகச் சிக்கலை எடுத்துக்கொண்டு, அச்சிக்கல் எவ்வாறு இலக்கியங்களில் அணுகப்பட்டுள்ளது என்பதையும், அச்சிக்கலுக்கு எத்தகைய தீர்வுகள் முன் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் சமுதாயவியல் அணுகுமுறை ஆராய்கின்றது. இவ்வாய்வில், மு.மேத்தாவின் கவிதைகள் வெளிப்படுத்துகின்ற, உழைப்பாளர் சமூகமக்களின் வாழ்வியல் சிக்கல்கள், சிக்கலுக்கான காரணம் மற்றும் அதைத் தீர்ப்பதற்குரிய தீர்வுகள் ஆராயப்படுவதால் “சமுதாய அணுகுமுறை” கையாளப்பட்டுள்ளது.

## சமூகம்

“சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல்லினை ‘சொசைட்டி’ என மேனாட்டவர் அழைப்பர். அச்சொல் ‘சோசியசு’ என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். அதற்குக் ‘கேண்மை’ அல்லது

'ஒன்றுகூடுதல்' என்பது பொருளாம்". சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதி அல்லது ஒரு அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் வாழ்கின்ற மக்கள் குழுவைக் குறிக்கின்றது. சமூகம் பற்றிய விளக்கங்கள் யாவும் தனிமனிதர்கள் பலர் கூடி வாழும் வாழ்வியல் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டே, சமூகம் எனும் நிறுவனத்தை வரையறுக்கின்றன. எனவே, மொழி, பண்பாடு, இனம், தொழில் எனும் காரணங்களில் ஏதேனும் ஒன்றின் வழி இணைந்து குழுவாகச் செயற்படும் மக்கள திரள்/ குழு/ தொகுதியைச் சமூகம் என வரையறுத்துக் கொள்ளலாம்.

## உழைப்பாளர் நிலை

ஓய்வறியாது, தினமும் அயராது பாடுபட்டு உழைத்துக் களைத்த மக்களுக்கு, முதலாளி வர்க்கங்கள் உழைப்பதற்கு ஏற்ற கூலி கொடுக்காத நிலை பலவிடங்களில் இருக்கின்றன. பிறர் வயிற்றுக்காக உழைக்கும் உழைப்பாளிகளின் வயிறுகள், வறுமையினால் வறண்டே கிடக்கின்றன.

"ஏழையின் பசியை

எதிர்த்துத் துரத்திட

கலயத்தைப் பானையைத்

தோள்களில் தூக்கிச்

சுமக்குமானால்

அடுப்புக்குச் செய்வோம்

ஆராதனை"

என்னும் மேத்தாவின் கவிதை, உழைக்கின்ற மக்கள் உணவின்றி பசியால் படும் துயரத்தை எடுத்துரைக்கின்றது (Metha, 2004).

இதனை,

"பாதிக்குதே பசி என்றுரைத்தால் செய்த

பாவத்தைக் காரணம் காட்டுவார்"

என்று பாரதிதாசன் தனது வரிகளில் உணர்த்துகிறார் (Bharathidasan, 2010).

முதலாளிகளின் யானைப்பசியைப் போக்க, உழைப்பாளிகளின் உயிர் இரையாகுகின்றன. இதனை மேத்தா,

"இந்தியா

கண்ணீரில் உப்பு

காய்ச்சுகிறது

ஏழையரின் கண்ணீரில்

பந்தியில் அமர்த்தியுள்ள

பணக்காரர்களுக்காக" (Metha, 2006)

என்று பணக்காரர்களுக்காக உழைப்பாளிகள் அல்லற்படும் நிலையினை விவரிக்கிறார்.

சமூகத்தின் மானம் காக்க, ஆடை நெய்து கொடுத்தவர்கள், அரை நிர்வாணமாய் அலைகின்ற அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

"ஆக்கித் தருந்தொழிலாளரின் மேனி

அரைகுறை ஆடையில் தோணி - புவி

காக்கும் இவர்களின் கால்களும் தோள்களும்

காசுள்ள மனிதரின் ஏணி" (Metha, 2007)

என்னும் வரிகளில் மேத்தா, நெசவு செய்யும் நெசவாளர் உடுத்த உடையில்லாமல் இருக்கும் நிலையினையும், உழைக்கும் வர்க்கத்தினரின் கால்களும் தோள்களும் முதலாளி வர்க்கத்தினருக்கு ஏணியாவதையும் உணர்த்துகிறார்.

"ஊருக்கு உழைத்தவன் ஆண்டியானான்

பாருக்காகப் பாடுபட்டவன் போண்டியானான்"

என்று உலகத்திற்கும், ஊருக்கும் உழைத்து வாழ்க்கையில் நலிந்து போனவர்களை இராஜரத்தினம் கூறுகிறார் (Rajarathinam, 2011).

உழைக்கும் வர்க்கத்தினருக்கு உணவு கிடைக்காமல், அடுப்பு விளக்குகள் அணைந்த நிலையினையைக் கவிஞர்.மேத்தா,

"அலங்கார விளக்குகள்

வீதிகளில் போட்டாச்சு

அடுப்பு விளக்குகளே

அணைந்து வெகு நாளாச்சு" (Metha, 2004a)

என்று குறிப்பிடுகிறார்.

இச்சமூகத்தில், பிறர் உழைப்பால் வாழும் உயர்வர்க்கம் ஏகாந்தமாய் வாழ்வதையும், உழைத்துக் கொடுக்கின்ற உழைப்பாளிச் சமூகம் ஏழ்மையில் அவதிப்படுவதையும் மு.மேத்தா கவிதைகள் வழி அறிய முடிகிறது.

## சுரண்டல்

சுயநலம் மிக்க, பேராசை உடைய, கள்ளத்தனம் கொண்டவர்கள், வயிற்றுத் தேவைக்காக உழைத்து வாழும் உழைப்பாளர்களின் உழைப்பினை சுரண்டி வாழ்கின்றனர். உழைப்பாளிச் சமூகத்தின் அடிப்படைத் தேவைகள் கூட அபகரிக்கப்படுகின்ற கொடியநிலை நிலவுகின்றது.

இந்திய நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாக இருப்பவர்கள் இந்த நாட்டைச் சுரண்டிக் கொண்டிருக்கும் தலைவர்கள் என்பதை,

"ஏண்டி சுதந்திரதேவி - இங்கு

எவரது கைகளில் தந்தனை சாவி

பூட்டிய கதவினுக்குள்ளே - தங்கப்

புதையலைப் பங்கிடும் பூதங்கள் யாரோ

நாடெங்கும் தலைவர்கள் உண்டு - தினம்

நாட்டினைச் சுரண்டும் அவர் செய்யும் தொண்டு

கண்களில் அனைத்தையும் கண்டு - ஒரு

கனல்மழை எழுந்தது நெஞ்சினில் இன்று" என்று மேத்தா தம் கவிதையில் கூறுகிறார். இந்திய நாடு வளமானதாக இருந்தாலும் அந்த வளத்தை எல்லோரும் அனுபவிக்க இயலாமல், ஒரு சிலர் மட்டும் சுரண்டிக் கொண்டிருக்கும் நிலையினைக் கூறுகிறார் (Metha, 2004b).

ஒரு மனிதனை மட்டுமே வளர்த்து வருகின்ற உலகம் தேவையில்லை. அழிந்தொழியட்டும் என்பதைப்,

“ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்

உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்”

என்று பாரதிதாசன் தனது கவிதையில் கூறுகிறார் (Bharathidasan, 2010).

நாட்டில் ஏழை பணக்காரர் என்ற இருபிரிவினர் இருக்கின்றனர். இதில் பணக்காரர்களான முதலாளிகள், ஏழைகளான உழைப்பாளிகளைச் சுரண்டி வாழ்வதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர். இந்த முதலாளி வர்க்கம், உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சுவதை,

“ஏழைகளின்

ரத்த தானத்தால்

அச்சிடப்பட்ட

கரன்ஸி நோட்டுகள்

பணக்காரர்களின்

கழிவறைக் காகிதங்களாய்

பயன்படுகின்றன” (Metha, 2006)

என்று மேத்தா தனது கவிதையில் குறிப்பிடுகின்றார்.

தொழிலாளர், பட்டினியால் பாடுபட்டு உழைத்த பணத்தை, முதலாளிகள் எல்லாம் அனுபவிப்பது கண்டு பாரதிதாசன்,

“நடவு செய்த தோழர் கூலி

நாலணா ஆனதை ஏற்பதும்

உடலுழைப்பில்லாத செல்வர்

உலகையாண்டு உலா வருவதும்

கடவுளாணை என்று உரைத்த

கயவர் கூட்டம்”

என்று கயவர்களைத் தோலுரித்துக் காட்டுகிறார் (Metha, 2006).

இந்தப் புவிதனில் சுரண்டும் ஆட்கள்தான் மாறுகிறார்கள் தவிர, சுரண்டல் நின்ற பாடில்லை. எல்லாக் காலத்திலும் சுரண்டல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தியா சுதந்திரம் அடைந்தும், நாட்டில் சுரண்டும் நிலை நீடிப்பதை,

“சரித்திர மாளிகையில்

அஹிம்சைப் பேரொளியில்

பகத்சிங்குகள் மறைக்கப்பட்டதால்தானா

சுதந்திர மாளிகையை

எலிகள் சுரண்டுகின்றன?” (Metha, 2003)

என்று வெகுண்டு கேட்கிறார் கவிஞர் மு.மேத்தா.

கொடியதிலும் கொடியது வறுமை என்பர். வறுமைக்குக் காரணமாய் சுரண்டல் இருப்பது அதனினும் கொடியது. இது சமூகத்தின் சமத்துவத்தையும் நீதியையும் சுரண்டிக் கொல்கிறது.

உழைப்பாளர்களின் ஏழ்மைக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது இக்கொடிய சுரண்டல்தான் என்ற சிந்தனை மேத்தாவின் கவிதைகளில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

## எழுச்சிக்குரல்

உலகினில், உழைக்கும் வர்க்கத்தினர் தம்முள் ஒற்றுமை உணர்வோடு, ஒன்று சேர்ந்து, தமக்கு எதிரான உழைப்புச் சுரண்டல் நிகழ்த்துவோரையும், உழைக்கும் வர்க்கத்தினரை இழிவாகக் கருதுபவர்களையும் கண்டிக்கும் வகையில் பல போராட்டங்கள் நிகழ்த்தியுள்ளனர். உழைக்கும் சமூகத்தின் அடிப்படைத் தேவைகள் அபகரிக்கப்படும் நிலையில் போராட்ட உணர்வுகள் ஏற்படுகின்றன. தாம் செய்யும் வேலைக்கு ஏற்ற கூலி கிடைக்காத நிலையிலும் போராட்டங்கள் நிகழ்கின்றன.

காலங்காலமாய் உழைக்கும் மக்கள் அடிமைத்தனத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். உழைத்துக் கொடுக்கும் உழைப்பாளி வர்க்கம், சுரண்டி உண்ணும் முதலாளி வர்க்கத்திடம் அடிமையாகிக் கிடக்கும் நிலையினைக் கண்டு,

"ஆதிக்கக் கோட்டைகளை

எச்சரிப்போம்

உழைப்பவர் தம் பெயரை

உச்சரிப்போம்!

சாட்டைகளை முறிப்போம்

அடிமைச் சரித்திரத்தை எரிப்போம்!" (Metha, 2006)

என்று மேத்தா தனது கவிதை வழி ஆதிக்கத்தை எதிர்த்து, எழுச்சிக்குரல் எழுப்புமாறு உழைப்பாளிகளுக்கு உரைக்கின்றார்.

இதனையே,

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்

உதயப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பராய் விடுவார் உணரப்பா நீ"

என்று பாரதிதாசன் தனது வரிகளில் வலியுறுத்துகிறார் (Bharathidasan, 2010)..

இவர்கள் இல்லையென்றால், நாடு இல்லை என்று சொல்லுமளவிற்குப் பெருமை பெற்றவர்கள் உழைப்பாளிகள். அத்துனை பெருமைக்குரியவர்கள், பயந்தொடுங்கி அடிமையாய் வாழாது, அவர்களுக்கு எதிரான சுரண்டல் அற்றும் சூழ்ச்சிகளை எதிர்த்து எழுச்சிக் கொள்ள வேண்டும் என்பதை மேத்தாவின் கவிதைகள் வழி உணர முடிகிறது.

## முடிவுரை

ஊருக்கே உழைத்துக் கொடுக்கும் உழைப்பாளிச் சமூகம், ஒரு வேளை உணவின்றி, உடுக்க உடையின்றி, ஏழ்மையினால் துன்பத்தையும், துயரத்தையும் அனுபவிப்பதாக மேத்தாவின் கவிதைகள் காட்சிப்படுத்துகின்றன. உழைப்பாளிச் சமூகத்தின் ஏழ்மைக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது, முதலாளி வர்க்கத்தினரின் சுரண்டல் என்ற சிந்தனை மேத்தாவின் கவிதைகளில் வெளிப்படுவது இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. உழைப்பாளர்களைச் சுரண்டி வாழும் முதலாளித்துவ வர்க்கங்களுக்கு எதிராக, சமூகத்தினரும் உழைப்பாளர்களும் எழுச்சிக்குரல் கொடுக்க வேண்டும் என்ற தீர்வினை, அவரது கவிதைகள் முன்வைக்கின்றன என்பதை இவ்வாய்வு முடிவுகளாகக் கொள்கிறது.

## References

Bharathidasan, (2010) Bharathidasan Kavithaikal, Gankai Puthaka Nilayam, Chennai, India

Metha, M (2003) Kanner Pookal, Kumaran Pathippakam, Chennai, India

Metha, M (2004a) Kanavuk Kurhiraikal, Thirumakal Nilayam, Chennai, India

Metha, M (2004b) Thiruvulavil Oru Therupadakan, Thirumakal Nilaya Chennai, India

Metha, M (2006) Ottrai Theekuchi, Kavitha Publication, Chennai, India

Metha, M (2007) Manachsiraku, Kavitha Publication, Chennai, India

Rajarathinam, K. (2011) Sanga ilakiyathil Pothumakkal, Saratha Pathippakam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License